# திரைப்படக் கலைஞர்கள் மற்றும் திரைப்படத் தொழில்நுட்பவியலாளர்களுக்கான தேசிய திரைப்படக் கூட்டுத்தாபன நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் - 2012

## 1. நிதிசார் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர, திரைப்படக் கலைஞர்கள் மற்றும் திரைப்படத் தொழில்நுட்பவியலாளர்களுள்ளான தேசிய திரைப்படக் கூட்டுத்தாபன நம்பிக்கைப் பொறுப்பின் 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 நிதிசார் கூற்றுக்களைச் சமர்ப்பிப்பதிலுள்ள குறைபாடுகள்

கூட்டுத்தாபன நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் கடைப்பிடித்த கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை.

#### 1.2.2 கணக்காய்விற்கான சான்றின்மை

ஆரம்ப மானியமாக நிதியத்திற்குப் ரூபா பத்து இலட்சம் வழங்கப்பட வேண்டுமாயினும் அவ்வாறு வழங்கப்பட்டதற்கான சான்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

#### 1.2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை கீழே காணப்படுகின்றன.

| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு** | **இணங்காமை** |
| --- | --- |
| (அ) 1986 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க திரைப்படக் கலைஞர்கள் மற்றும் திரைப்படத் தொழில்நுட்பவியலாலர்களுக்கான தேசிய திரைப்பட நம்பிக்கைப் பொறுப்பு அதிகாரச் சட்டத்தின் 11 ஆம் பிரிவினது 3 ஆம் உப பிரிவு | வருமான, செலவினக் கணக்கிலும் ஐந்தொகையிலும் கையொப்பமிட அதிகாரமளிக்கும் சபையின் தீர்மானத்தின் பிரகாரமான சபை அங்கத்தவர்கள் இருவரால் அவை கையொப்பமிடப்படாதிருந்தன. |
| (ஆ) 2002 ஜுன் 12 ஆந் திகதிய பீஎப்/பீஈ/09 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதியதிகாரச் சட்டத்தின் 11 ஆம் பிரிவினது (ஆ) உப பிரிவு | திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலையான வைப்பு ரூபா 400,000 முதலீட்டிற்கான திறைசேரியின் அங்கீகாரம் பெறப்படவில்லை. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், கூட்டுத்தாபகன நம்பிக்கைப் பொறுப்பின் மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவு முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 73,963 இற்கு எதிரான ரூபா 180,328 மிகையாகும். இதனால் நிதிசார் விளைவுகளில் ரூபா 254,291 முன்னேற்றம் காட்டுகின்றது. முதலீட்டு வட்டி வருவாய் அதிகரிப்பே இம் முன்னேற்றத்திற்கான காரணமாகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்திறன்

1998 தொடக்கம் 2012 வரையான 14 ஆண்டு காலத்தின்போது, திரைப்படக் கலைஞர்கள் மற்றும் திரைப்படத் தொழில் நுட்பவியலாளர்களுக்கான ஓய்வூதியம், வைத்திய உதவி, மரணச்சடங்கிற்கான உதவி என்பவற்றிக்காக ரூபா 18,729,980 வழங்கப்பட்டிருந்தது.

இது சம்பந்தமாகப் பின்வரும் அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின்போது 42 பேருக்கு ஓய்வூதியமாக மாதாந்தம் ரூபா 2,000 வீதம் ஓய்வுதியமாக ரூபா 1.036,000 உம் ஆண்டின் போது மரணமுற்ற 3 ஓய்வூதியம் பெற்றவர்களில் ஒருவருக்கு மாத்திரம் மரணச் சடங்கு உதவிப் பணமாக ரூபா 10,000 உமாக மொத்தமாக ரூபா 1,046,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) ஓய்வூதியத்திற்கான தகைமையைப் பெறும் கலைஞர்களும் தொழில் நுட்பவியலாளர்களும் வருடாந்தம் தெரிவு செய்யப்பட்டு அவர்கள் ஓய்வூதிய நிதியத்தில் இணைத்துக் கொள்ளப்பட வேண்டுமாயினும், 2005 ஆம் ஆண்டின் பின்னர் அவ்வாறான தெரிவு மேற்கொள்ளப்படவில்லை. மேலும், 2005 ஆம் ஆண்டில் 5 பேர் மாத்திரம் அந் நிதியத்தில் இணைத்துக் கொள்ளப்பட்டதுடன் 2004 ஆம் ஆண்டில் தகைமை பெற்றிருந்த 8 கலைஞர்கள் 2013 ஜூன் 30 வரையும் நிதியத்தில் இணைத்துக் கொள்ளப்படவில்லை.

**3.2 முகாமைத்துவ வினைத்திறமையின்மை**

**3.2.1 அதிகாரச் சட்ட நோக்கம் நிறைவேறாமை**

பின்வரும் அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1986 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க திரைப்படக் கலைஞர்கள் மற்றும் திரைப்படத் தொழிலநுட்பவியலாளர்களுக்கான தேசிய திரைப்படக் கூட்டுத்தாபன நம்பிக்கைப் பொறுப்பு அதிகாரச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் நம்பிக்கைப் பொறுப்பின் நிர்வாகம் முகாமைத்துவம் மற்றும் மேற்பார்வை என்பவற்றிக்கு நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை ஒன்று நியமிக்கப்பட்டிருந்தபோதும், அது மீளாய்வாண்டின்போது ஒரேயொரு தடவையே தனது கூட்டத்தை நடாத்தியிருந்தது.

(ஆ) அதிகாரச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழ் உள்ள பின்வரும் நோக்கம் 2012 ஆம் ஆண்டிலும் நிறைவேறாதிருந்தது.

(i) திரைப்படக் கலைஞர்கள் மற்றும் தொழில்நுட்பவியலாளர்களுக்கு உதவி அளிக்குமுகமாக நலனோம்பல் நிதியம், சேமிப்பு நிதியம், சேமிப்பு

அல்லது சிக்கன சங்கங்கள் மற்றும் ஏனைய சமமான திட்டங்கள் அமுலாக்கப்படல்

(ii) தகைமை வாய்ந்த திரைப்படக் கலைஞர்கள் அல்லது தொழில்நுட்பவியலாளர்களுக்கு 60 வயது பூர்த்தியானதும் கடன், படி, வீட்டு வசதி அல்லது பிற சமமான நலன்களை வழங்குதல்

(இ) நம்பிக்கைப் பொறுப்பின் குறிக்கோள்களை அமுலாக்குவதற்கெனத் தயாரிக்கப்பட்ட விதிக் கோவை 2003 ஆம் ஆண்டிலேயே இறுதியாக திருத்தஞ் செய்யப்பட்டிருந்தது. மாதாந்தம் ரூபா 2,000 எனும் ஓய்வூதிய உதவு தொகை தற்போதைய நிலைமைக்கேற்ப அதிகரிக்கப்படுதல் மற்றும் உதவு தொகைக்கு அருகதையாவதற்கு விதிக்கப்பட்டுள்ள ரூபா 3,000 மாதாந்த வருமான வரம்பை அதிகரிப்பது என்பன தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

**3.2.2 அமுலாக்கப்படாத நம்பிக்கைப் பொறுப்பாளர் சபைத் தீர்மானங்கள்**

நம்பிக்கைப் பொறுப்பிடமிருந்த வைப்புக்களின் மூலம் பெறப்படும் வருடாந்த வட்டி மற்றும் திரைப்படக் கூட்டுத்தாபனத்திடமிருந்து நம்பிக்கைப் பொறுப்பு பெறப்பட்ட ரூபா 200,000 தொகையில் ஓய்வூதியக்காரர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படுகின்றது. நம்பிக்கைப் பொறுப்பின் நிதிசார் நிலைமையை மேலும் முன்னேற்றுவதற்கு 2004 செப்டெம்பர் 21 ஆந் திகதி நடைபெற்ற 79 ஆம் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையின் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முக்கிய தீர்மானங்கள் பல 2012 ஆம் ஆண்டிலும் அமுலாக்கப்படாதிருந்தன இந்நிலைமை முன்னைய கணக்காய்வு அறிக்கைகளிலும் சுட்டிக்காட்டப்பட்டபோதும் அவற்றை அமுலாக்குவதற்கு நம்பிக்கைப் பொறுப்பு போதிய கவனஞ் செலுத்தவில்லை.

3.2.3 1985 ஆம் ஆண்டில் ருக்மணிதேவி தேசிய ஞாபகார்த்த நிதியத்தைப் பயன்படுத்தி பாடகர் ஒருவர் இந்தியாவில் ''பூனா'' திரைப்பட நிறுவனத்தில் பட்டப்பின்படிப்பை மேற்கொள்வதற்குப் புலமைப்பரிசில் வழங்கும் முறை ஆரம்பிக்கப்பட்டபோதும், மீளாய்வாண்டிலும் முன்மொழியப்பட்ட இப்புலமைப்பரிசில் முறை அமுலாக்கப்படாததுடன் மீளாய்வாண்டு இறுதியில் நிதியத்தின் பெறுமதி ரூபா 462,778 ஆகவிருந்தது.

3.2.4 திறைசேரி உண்டியல் மீதிகளின் உறுதிப்படுத்தலின் பிரகாரம் ரூபா 5,529,948 பெறுமதியான திறைசேரி உண்டியல் 182 நாட்களுக்காக வைப்பு செய்யப்பட்டிருந்தது. அதில் ரூபா 5,000,000 தொகையானது 2012 ஜூலை முதல் 91 நாட்களுக்கு 11 சதவீத வட்டியிலும் 2012 ஒக்டோபர் முதல் 98 நாட்களுக்குக் 10.8 சதவீத வட்டியிலும் இரு

சந்தர்ப்பங்களில் புதுப்பிக்கப்பட்டிருந்தன. அதற்கமைய, அத்தொகை 182 நாட்களுக்கு திறைசேரி உண்டியலில் வைப்பில் இடப்படுதலால் 12.75 சதவீத வட்டி அமைவதாக அவதானிக்கப்பட்டதுடன் ஆரம்ப வைப்பின் மூலம் பெற வேண்டிய வட்டி வருமானம் ரூபா 29,535 குறைவாகக் கணிப்பிடப்பட்டு நிதியத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. அத்தொகையைப் பெறுவதற்கான நிதியம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

1986 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க திரைப்பட கலைஞர்கள் மற்றும் தொழில் நுட்பவியலாளர்களுக்கான தேசிய திரைப்படக் கூட்டுத்தாபன நம்பிக்கைப் பொறுப்பு அதிகாரச் சட்டத்தின் 5 ஆம் பிரிவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு நிறைவேற்றப்பட்ட விதிக் கோவை 12 க்கமைய நிதியத்தை முன்னேற்றுதற் பொருட்டு மாதாந்தம் கொடுப்பனவு செய்வதற்குத் தேவைப்படும் தொகையை மாத்திரம் வைத்துக்கொண்டு ஏனையவற்றைப் பயனுள்ள வகையில் முதலீடு செய்ய வேண்டும் சராசரி மாதாந்தச் செலவினம் ரூபா 100,000 க்கும் ரூபா 150,000 க்குமிடையே போதுமானதாக அமைவதால் மாதாந்தம் சராசரி ரூபா 1 மில்லியன் தொடக்கம் ரூபா 1.5 மில்லியன் வரை அதிகமாக வங்கி நடைமுறைக் கணக்குகளில் தேங்கியிருந்தன.

## 4. கணக்களி தகைமையும் சிறந்த ஆளுமையும்

### 4.1 நிதிசார் கூற்றுக்ளைச் சமர்ப்பித்தல்

2003 ஜுன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்கீட்டு ஆண்டு முடிவுற்று 60 நாட்களுக்குள் நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும், கூட்டுத்தாபன நம்பிக்கைப் பொறுப்பு மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களை 3 மாத தாமதத்தின் பின்னர் 2013 ஜுன் 06 ஆந் திகதியன்றே சமர்ப்பித்திருந்தது.

### 4.2 கூட்டிணைந்த திட்டம்

2003 ஜுன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 05 ஆம் பிரிவின் பிரகாரம் கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்படவில்லை.

## 4.3 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வு செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் உள்ள குறைபாடுகள் அவ்வப்போது நம்பிக்கைப் பொறுப்பின் தலைவருக்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமானச் சேகரிப்பு

(இ) ஓய்வூதியக் கொடுப்பனவு

(ஈ) கணக்குப் புத்தகங்கள், பதிவேடுகளைப் பேணுதல்

(உ) முதலீடு